சுருக்கம்

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம் – கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.அ.முஹம்மது சலாவூதீன் என்பவர் புனித பயணம் மற்றும் திருமண விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு 17.10.2022 முதல் 28.11.2022 வரை வெளிநாடுகள் (உம்ரா மற்றும் சிங்கப்பூர்) சென்று வருவதற்கு அரசின் அனுமதி வேண்டியது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.4) துறை

அரசாணை (வாலாயம்) எண். 439 | நாள் 14.10.2022.

சுபகிருது, புரட்டாசி 27
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டவை.

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.57938/ 2022/ப.ரா.1.4, நாள் 03.10.2022.

*****

**ஆணை:-**

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.அ.முஹம்மது சலாவூதீன் என்பவர் 17.10.2022 முதல் 28.11.2022 வரை வெளிநாடுகள் (உம்ரா மற்றும் சிங்கப்பூர்) புனித பயணம் மற்றும் திருமண நிகழ்ச்சியின் பொருட்டு சென்று வர அனுமதி வழங்குமாறும், மேற்படி திருமருகல் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் வெளிநாடுகள் (உம்ரா மற்றும் சிங்கப்பூர்) சென்று வருவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 82-A-ன்படி அரசின் அனுமதி வழங்குமாறும், கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 82A-ன்படி சிற்றூராட்சியின் தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது ஊராட்சி ஒன்றியக் குழு அல்லது மாவட்ட ஊராட்சியொன்றின் தலைமையர், துணைத் தலைமையர் அல்லது உறுப்பினர் பதவியை வகித்து வருகின்ற நபர் எவரும் அரசின் எழுத்து வடிவிலான அனுமதியுடனல்லாமல், அவ்வாறான தமது அலுவலகத் தகுதியில் அயல்நாடு எதற்கும் பயணம் எதனையும் மேற்கொள்ளுதல் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 82-A-ன்படியும் நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.அ.முஹம்மது சலாவுதீன் என்பவர் 17.10.2022 முதல் 28.11.2022 வரை வெளிநாடுகள் (உம்ரா மற்றும் சிங்கப்பூர்) புனித பயணம் மற்றும் திருமண விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு சென்று வர முன் அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ. அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.அ.முஹம்மது சலாவுதீன்,
கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
(வழி: ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாகப்பட்டினம் மாவட்டம்).
ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15
இருப்பு கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
14/10/22